ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1545 - 2008 අප්‍රේල් 11 වැනි සිකුරාදා - 2008.04.11

*1545 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 356 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 357 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 358 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


*__கவனிக்க.__- (1) வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திசபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

*(2) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

*(3) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் __வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.__ வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு __இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு__ முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஏப்பிறல் 18 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஏப்பிரல் 04 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2008 இன் இல. 194*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2559*

## இலங்கை தரைப்படை – நிரந்தரப்படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்*

### பதவி நிரந்தரமாக்குதல்

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*கப்ரின் (தற்காலிக மேஜர்) தேவ் சந்திம ஹேவாவித்தான, இஇவைப (உ/61861)*

### இளைப்பாறுதல்

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரபடையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*மேஜர் தேவ் சந்திம ஹேவாவித்தான, இஇவைப (உ/61861)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007.07.23*

*4- 207*

---

*2008 இன் இல.195*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2566*

## இலங்கை தரைப்படை – தொண்டர் படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

### இளைப்பாறுதல்

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஒகத்து மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*மேஜர் குமாரபதி விதானலாகே தொன் உஷாந்த் சுபுன் பெரேரா, ஆர்எஸ்பீ, இசைப (உ/61068)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007.07.23*

*4- 206*

---

*2008 இன் இல. 196*

*டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/ 2560*

## இலங்கை தரைப்படை – நிரந்தரப்படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

### இளைப்பாறுதல்

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஒகத்து மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-*

*கப்ரின் வன்னி ஆரச்சிகே லக்ஷ்மன் பிரியந்த, கரெ (உ/63216)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007.07.26*

*4- 208*

---

*2008 இன் இல.197*

*டீவீஎவ்/ஆர்ஈசீரீ/30 (X) ஏவை.*

## இலங்கை தரைப்படை – தொண்டர் படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

### இளைப்பாறுதல்

*பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2007, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-*

*கேர்ணல் வர்ணகுல ஆரச்சிகே சிரிலால் தயந்த பிரணாந்து (உ/2053)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007.06.20.*

*4- 205/1*

*2008 இன் இல. 198*

டீவீஎவ்/ஆர்ஈசீர்/30 (X) ஏவீ.

**இலங்கை தரைப்படை – தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் ஜெனரால் வரக்காபிட்டிய அபேகோன்கே தொன் சுனில் சில்வா (உ/1956).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.05.07

4- 205/2

*2008 இன் இல. 199*

டீவீஎவ்/ஆர்ஈசீர்/22/(vii) ஏவை.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, ஓகத்து மாதம் 31 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (தற்காலிக மேஜர்) வீரகோன் முதியன்சேலாகே மஹிந்தசேன மிநிரெ (உ/3391)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் வீரகோன் முதியன்சேலாகே மஹிந்தசேன மிநிரெ (உ/3391)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007.06.27.

4- 204

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

கொடபிடிய (போர்வை) முஸ்லிம் உற்சவம்

மாத்தறை மாவட்டத்தில் கொடபிடிய (போர்வை) முஹியத்தீன் பள்ளிவாசலின் வருடாந்த கொண்டாட்டம் 2008, ஏப்பிறல் 23 ஆந் திகதி ஆரம்பமாகி மே 04 ஆந் திகதி முடிவுறும் என்பதை (175 ஆம் அதிகாரம்) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 1954, சனவரி மாதம் 08 ஆந் திகதிய இலக்கம் 10630 கொண்ட இலங்கை அரச வர்த்தமானிப்ப த்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 3 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1954, சனவரி மாதம் 08 ஆந் திகதிய இலக்கம் 10630 கொண்ட இலங்கை அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் மேற்கூறப்பட்ட காலப் பிரிவில் குறித்த ஒழுங்கு விதிகளின் கீழ் உபபிரிவில் விபரிக்கப்படுகின்ற கந்தவுற துல எல்லையில் அமுலாகும்.

அய். எஸ் சமரகோன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
அதுரலிய.
2008, மாச்சு 26.

4-316

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"இன்டெர் கல்ட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய 1989.02.28 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "இன்டெர் கல்ட" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர்மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் "இன்டெர் கல்ட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாத விடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிப்பதிவாளர் மா அதிபதி.

என். (ஏ) 125.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு- 10.
2008 மாச்சு மாதம் 17.

4- 222

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 1360000011- பெப்பர் கோன்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2004.08.27 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்ட மொன்றில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"கடன் எடுத்த பெப்பர் கோன் என்ற பெயரில் வியாபாரம் செய்யும் கோரல லியனகே ரன்ஜித் குமார என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பாக களுத்தறை பிரசித்த நொத்தாரிசு ஆர். குரே அவர்களின் 2001.09.20 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2238 மற்றும் 2002.01.03 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2257 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் 2004.07.25 ஆந் தேதியன்று சொல்லப்பட்ட முறிகள் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ரூபா 11,29,176.29 தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது கீழ் இதற்கான அட்டவணையில் சொல்லப்பட்ட முறிகள் இலக்கங்கள் 2238 மற்றும் 2257 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட பணத்தொகை யான ரூபா 12,29,176.29 உடன் 2004.07.26 ஆந் திகதி முதல் ஏலத் திகதிவரை ரூபா 9,29,443.89 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14 சதவீத வட்டியுடன் மேலும் ரூபா 24,604.96 க்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 20 சதவீத வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து பணம் செலுத்தியபின் அதனைக் கழித்துக்கொண்டு அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 இல் உரிமம் பெற்ற ஏலதாரர் எல். வி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றனது."

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் இத்தகொடபத்து பஸ்துன் கோரளையில் மேற்கு தொடங்கொடை கிராமத்தில் அமைந்துள்ள புயும்புகொடலன்த அல்லது பாம்பிகொடலன்த லொட் 5 என்ற காணியின் நிலஅளவையாளர் பி.கே.பி. டப்ளிவ் குனவர்தனவின் 2001.06.29 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1066 இன்படி லொட் A (ஆனால் களுத்துறை மாவட்டம் வழக்கு இலக்கம் 26820 இணைக்கப்பட்ட நிலஅளவையாளர் டி. பி. ராஜபக்சவின் 1948.12.01 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2131 இல் காணி லொட் 2 என்று சொல்லப்பட்டது) மேற்படி சொல்லப்பட்ட காணித் துண்டு A யின் எல்லைகள் - வடக்கு : லொட் 1 மற்றும் 3 மற்றும் சுதுவீகும்புர ; கிழக்கு : சுதுவீகும்புர ; தெற்கு : இக்காணியின் லொட் 6 ; மேற்கு : வீதி. இக்காணியின் லொட் 3 இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 3றூட் 12.08பே.) அல்லது 0.3348 ஹெக்டெயார் மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடம், தாவரங்கள், பயிர் செய்யப்பட்ட எல்லாம் சேர்த்து மற்றும் சிரி தேவானந்த மாவத்தையில் இருந்து இக்காணிக்குச் செல்லும் பாதை பாவிக்கும் உரிமையுடன் இக்காணி மத்துகம காணி பதிவகத்தில் C 266/69 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

4-339

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2005.03.03 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது –

"1.பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சீ மத்தியு அத்தாட்சிப்படுத்திய 1996.05.08 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1610 இன் பேரில் இல. 3, சமன் மாவத்தை, கலவிலவத்த, ஹோமாகம என்னும் முகவரியைச் சேர்ந்த ரபிட் றிரான்ஸ் நிறுவனத்திடமிருந்து வருமதியாக உள்ள மேலதிகப்பற்று மீது நாற்பத்திநான்கு இலட்சத்து இருபத்தைந்து ஆயிரத்து தொளா யிரத்து எண்பத்தொன்பது ரூபாய் எழுபத்தாறு சதங்களும் (ரூ. 44,25,989.76) அத்துடன் மேலதிகப்பற்று கணக்கு மீது பதின்மூன்று இலட்சத்து இருபத்துநான்கு ஆயிரத்து இருநூற்றிப் பதினெட்டு ரூபாய்களும் அறுபது சதங்களில் (ரூ. 13,24,218.60) மீது ஆண்டுக்கு 22.5 வீதத்தில் 2008.03.01 தொடக்கம் கொடுப் பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

2. மேலே 1 இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இல. 1610 ஆகியவற்றால் காப்பளித்து ஈடு வைக்கப்பட்ட சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் ரீ மற்றும் எச் ஏலத்தினருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவு அதன் திருத்தங்களுக்கமைய இத்தால் அனுமதியும் அதிகார மும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பலபேபற்றுவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுள் ஹோமாகமவில் அமைந்த சமன் மாவத்தை வரிமதிப்பிலக்கம் 3 ஐக் கொண்ட கலவில எஸ்டேட் எனஅழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. கே. எஸ். ஜயரத்ன தயாரித்த 1996.01.02 ஆந் திகதியிட்ட புறக்குறிப்பிலும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ. ஏ. எல். சேனாரத்ன தயாரித்த 1964, மாச்சு 16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2898 இல் விபரித்த துண்டு 30 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்டு குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 35 உம் ; கிழக்கில் : துண்டு ஏ உம் ; தெற்கில் : பீ உம் ; மேற்கில் : துண்டு 29 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2898 இன் படி இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ. 762/177 இல் பதிவுசெய்யப்பட்டது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2898 இல் விபரித்த துண்டுகள் ஏ மற்றும் ஜே என அடையாளமிட்டு விபரித்த காணி மீதான வழி உரிமையும் ஆகும்.

சீ. டபிள்யூ. வெலகெதர,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
நுகேகொட.

4-343

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2004.03.29 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது –

"1.பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எம். எம். சியாட் அத்தாட்சிப்படுத்திய 1998.01.16 ஆந்திகதியிட்ட ஈட்டுமுறி இல. 78 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஜீ. தி அல்விஸ் அத்தாட்சிப்படுத்திய 1996.08.20 ஆந் திகதியிட்ட முறி இல. 427 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். த சில்வா அத்தாட்சிப் படுத்திய 1997.10.20 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1766 ஆகியவற்றின் பெயரில் இல. 6, சமன் மாவத்தை, கலவிலவத்த, ஹோமாகம என்னும் முகவரியைச் சேர்ந்த எட்கார் அல்விஸ், திரு. மல்லவத்த ஹெட்டிஆரச்சிகே ரவின் பிரசன்ன தி அல்விஸ் மற்றும் திருமதி சுஜாதா பத்மினி தி அல்விஸ் ஆகியோரிடமிருந்து முதலும் 2008.02.29 ஆந் திகதிவரை வட்டியும் நாற்பத்தாறு இலட்சத்து பத்து ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தைந்து ரூபாகளும் இருபத்திரெண்டு சதமும் (ரூ. 46,10,925.22) அத்துடன் மேலதிகப் பற்று கணக்கு மீது பதினான்கு இலட்சம் ரூபா (ரூ. 14,00,000.00) மீது ஆண்டுக்கு 22.5 வீதத்தில் 2008.03.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

2. மேலே (1) இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 78, 427 மற்றும் 1766 ஆகியவற்றால் காப்பளித்து ஈடு வைக்கப்பட்ட சொத்தை பகிரங்க

ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் ரீ மற்றும் எச் ஏலத்தினருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவு அதன் திருத்தங்களுக்கமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பல்லேபற்றுவில் ஹோமாகம நகர சபை எல்லைகளுள் ஹோமாகமவில் சமன் மாவத்தையில் அமைந்த சமன் மாவத்தை வரிமதிப்பிலக்கம் 6 ஐக் கொண்ட கலவில எஸ்டேட் எனஅழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜே. சேதுங்க தயாரித்த 1971, திசெம்பர் 21 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 992 B இல் விபரித்த துண்டு 13 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்டு குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 12 உம் ; கிழக்கில் : துண்டு 11 உம் ; தெற்கில் : கலவில எஸ்டேற்றின் பகுதியும் ; மேற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ஏ. எல். சேனாரத்ன தயாரித்த 1964, மாச்சு 16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2898 இல் துண்டு ஏ உம் எல்லைகளாகக் கொண்டு இருபத்துநான்கு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 24.5பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ. 495/64 இல் பதிவுசெய்யப்பட்டது.

அத்துடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ஏ. எல். சேனாரத்ன தயாரித்த 1964, மாச்சு 16 திகதியிட்ட வரைபடம் இல. 2898 இல் விபரித்த துண்டு ஏ. என அடையாளமிட்ட (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) காணித்துண்டு மீதான வழி உரிமையும் ஒரு றூட் பதின்மூன்று தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 13.6பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ. 876/292 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

சீ. டபிள்யூ. வெலகெதர,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நுகேகொட.

4-344

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2007.12.13 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது –

"1. பிரசித்த நொத்தாரிசு ஜீ. எஸ். எம். சமரகோன் அத்தாட்சிப்படுத்திய முறையே 1993.10.27 மற்றும் 1994.11.30 ஆந் திகதியிட்ட முறி இலக்கங்கள் 1074 மற்றும் 2225 ஆகியவற்றின் பேரிலும் பிரசித்த நொத்தாரிசு எம். டி. முனசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 1991.02.07 ஆந் திகதியிட்ட முறி இல. 450 இன் பேரிலும் இல. 2, ஜயகொடி பிளேஸ், திவுலப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. வதுருவலாகே வொலி பெர்ணாண்டோ என்பவரிடமிருந்து முதலும் 2007.09.30 வரை வட்டியும் மூன்று இலட்சத்து ஐம்பத்தாறு ஆயிரத்து முந்நூற்றெட்டு ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 3,56,308.25) அத்துடன் தொண் ணூற்றாறு ஆயிரத்து அறுநூற்று அறுபது ரூபா (ரூ. 96,660.00) மற்றும் இருபத்தெட்டாயிரத்து நாநூற்று நாற்பத்தேழு ரூபா முப்பத்தொன்பது சதத்திலும் (ரூ. 28,447.39) மற்றும் ஒரு இலட்சத்து எழுபத்தாறு ஆயிரத்து முந்நூற்று எண்பத்தேழு ரூபா இருபத்தாறு சதத்திலும் (ரூ. 1,76,387.26) முறையே ஆண்டுக்கு 18%, 5% மற்றும் 8% ஆகிய வீதங்களில் 2007.10.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 450, 1074 மற்றும் 2225 ஆகியவற்றின் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட மூன்று இலட்சத்து ஐம்பத்தாறு ஆயிரத்து முந்நூற்றெட்டு ரூபா இருபத்தைந்து சதமும் (ரூ. 3,56,308.25) அத்துடன் 2007.10.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26 இன் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு மஹாநாம டிரைவ், இல. 474, பிட்டகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ரஞ்சித்த சிறிவர்தன மஹாநாமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் மற்றும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி திவுலப்பிட்டிய கிளை முகாமையாளருக்கும் இத்தால் அதிகாரமும் அனுமதியும் வழங்கப்படுகின்றது."

**முதலாம் அட்டவணை**

மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவுப்பிரிவில் கம்பஹா மாவட்டத்தில் அலுத்குருகோறளை தூனகஹபற்றுவில் கெலபிட்டி முல்ல கிராமத்தில் அமைந்த வினிபிரெட் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து துண்டு 22 என அடையாளமிட்ட காணித்துண்டு – வடக்கில் : அதே காணியின் துண்டு 23 உம் ; கிழக்கில் : கே. விமலசேனவின் காணியும் ; தெற்கில் : நீர்கொழும்பிலிருந்து திவுலப்பிட்டிய வரை பெருந்தெருவும் ; மேற்கில் : துண்டு 45 என அடையாளமிட்ட காணிக்கு ஒதுக்கப்பட்ட 20 அடி அகலப்பாதையும், எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் வோல்றர் ஏ பெர்ணாண்டோ தயாரித்த 1980, ஒற்றோபர் 9 திகதியிட்ட வரைபடம் இல. 3198 இன் படி இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் 662/66 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட கெலபிட்டிமுல்ல கிராமத்தில் அமைந்த வினிபிரெட் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து துண்டு 23 என அடையாளமிட்ட காணித்துண்டு – வடக்கில் : அதே காணியின் துண்டு 24 உம் ; கிழக்கில் : கே. விமலசேனவின் காணியும் ; தெற்கில் : அதே காணியின் துண்டு 22 உம் ; மேற்கில் : 20 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட அதே காணியின் துண்டு 45 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3198 இன் படி இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது

நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் ஈ 662/ 67 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட கெலபிட்டிமுல்ல கிராமத்தில் அமைந்த வினிபிரெட் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து துண்டு 24 என அடையாளமிட்ட காணித்துண்டு – வடக்கில் : அதே காணியின் துண்டு 25 உம் ; கிழக்கில் : கே. விமலசேனவின் காணியும் ; தெற்கில் : அதே காணியின் துண்டு 23 உம் ; மேற்கில் : 20 அடி அகலப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட அதே காணியின் துண்டு 45 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3198 இன் படி இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் ஈ 662/68 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இரண்டாம் அட்டவணை**

4. மேற்குறிப்பிட்ட கெலபிட்டிமுல்ல கிராமத்தில் அமைந்த வினிபிரெட் எஸ்டேட் என அழைக்கப்படும் காணியிலிருந்து துண்டு 45 என அடையாளமிட்ட (20 அடி அகலப்பாதைக்கு ஒதுக்கப்பட்டது) காணித்துண்டு – வடக்கில் : அதே காணியின் துண்டு 35 உம் ; கிழக்கில் : அதே காணியின் துண்டுகள் 22 தொடக்கம் 34 உம் ; தெற்கில் : நீர்கொழும்பிலிருந்து திவுலப்பிட்டிய வரை பெருந்தெருவும் ; மேற்கில் : அதே காணியின் துண்டு 15 தொடக்கம் 21 உம், அதே காணியின் துண்டுகள் 43 உம், 42 உம் அதே காணியின் துண்டுகள் 38 மற்றும் 39 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3198 இன் படி ஒரு றூட் இருபது பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் ஈ 662/ 228 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். வீரசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
திவுலப்பிட்டிய கிளை.

4-345

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது:-

'பிலியந்தலையில் திரீ ஸ்டார்ஸ் பார்ம்' என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழிற்கொண்டு நடாத்துகின்றவர்களும் இருவரும் பிலியந்தலையைச் சேர்ந்தவர்களுமான தேவகே மறுபெயர் கத்ரியாராச்சி டோனா ஜனகதேவி கத்ரியாராச்சி மற்றும் பாலசூரியகே சுஜீவ பிரியங்கர என்போர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2003.12.29 ஆந் தேதிய 1370 இலக்க மற்றும் 2005.05.09 ஆந் தேதிய 1601 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், மேற்கூறப்பட்ட 1370 ஆம், 1601 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2001, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ள வாராக ஐம்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து நானூற்றித் தொண்ணூற்றொரு ரூபா எழுபது சதம் (ரூ. 51,42,491.70) கொண்ட தொகையும் 2001, சனவரி 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதி வரை முப்பத்து ஆறு இலட்சத்து ஆறாயிரத்து நானூற்றி நாலு ரூபா எண்பத்திரெண்டு சதம் (ரூ. 36,06,404.82) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் ஆறு மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்குமேல்(சஎவைவீ) ஆண்டொன்றுக்குப் பத்து சதவீத (10%) வட்டியும் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பணத்தொகையின் மீது (ரூ. 4,50,000) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் ஆறு மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக் கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் சொல்லப்பட்ட தேவகே மறுபெயர் கத்ரியாராச்சிகே டோனா ஜனகதேவி கத்ரியாராச்சி மற்றும் பாலசூரியகே சுஜீவ பிரியங்கர என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணித்துண்டுகளையும் வளவுகளையும், பாதையுரிமையுடன் சேர்த்து விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத்தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து முப்பத்து ஆறு இலட்சத்து ஆறாயிரத்து நானூற்றி நாலு ரூபா எண்பத்திரெண்டு சதம் (ரூ. 36,06,404.82) கொண்ட தொகையை, 2007, சனவரி 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவவோராண்டும் ஆறு மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட வைப்பு வீதத்துக்குமேல்(சஎவைவீ) ஆண்டொன்றுக்குப் பத்து சதவீத (10%) வட்டியும் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பணத்தொகையின் மீது (ரூ4,50,000) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் மூன்று

மாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீத மளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண் டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியுடன் ஐம்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து நானூற்றித் தொண்ணூற றொரு ரூபா எழுபது சதம் (ரூ. 51,42,491.70) கொண்ட மொத்தத் தொகையை அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற் காக 1370 ஆம் இலக்க 1601 ஆம் இலக்கங்களைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணித் துண்டுகளும் வளவுகளும், பாதையுரிமையுடன் சேர்த்து, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென் இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1370 ஆம், 1601 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவிலுள்ள தம்போவிலவில் அமைந்துள்ளதும், கஹட்டகஹாலந்த என்றழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளரான பீ. டபிள்யு. என். சீ. வித்தான என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002, யூன் 18 ஆந் தேதிய 1195 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 3ஏ1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் 3ஏ1 பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளதும் - வடக்கில் : இலங்கை மட்பாண்டங்கள் லிமிற்றெட் தாபனத்தின் வளவுகள் ; கிழக்கில் : 439 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 4 ; தெற்கில் : காணித்துண்டங்கள் 3ஏ2 மற்றும் 3ஏ4 ; மற்றும் மேற்கில் : 439 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2, பரப்பளவில் சொல்லப்பட்ட 1195 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தைந்து தசம் ஏழு ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 25.75பே.) கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட 1195 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட 3ஏ/சு 4 ஆம் இலக்கக் காணித்துண்டத்திலும் அதன்மீதும் அது நெடுகிலுமான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

4-347/1

---

## இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொஸகமவில் 'கொஸ்கம பேர்ட்டிலைசர்' என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டு நடாத்தப்படுகின்ற கொஸ்கமவைச் சேர்ந்த ராஜா லலித் தலகல மற்றும் சாந்தன பிறேமநாத் முதுன்கொட்டுவ என்போர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஜயசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, செத்தெம்பர் 27 ஆந் தேதிய 335 மற்றும் 336 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப் பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2006, யூன் 30 ஆந் தேதியன்றுள்ள வாறான இருபத்து ஒரு இலட்சத்து எண்பத்தொன் பதாயிரத்து முப்பத்திரெண்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 21,89,032.48) கொண்ட தொகையும் 2006, யூலை 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதி வரை பதினெட்டு இலட்சத்து இருபத்தோராயிரத்து அறுநூற்றியெழுபது ரூபா (ரூ. 18,21,670) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண் டொன்றுக்குப் ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியும் சொல்லப்பட்ட ராஜா லலித் தலகல மற்றும் சாந்தன பிறேமநாத் முதுன்கொட்டுவ என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 335 ஆம் மற்றும் 336 ஆம் இலக்கங்களை கொண்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, முறையே பாதையுரிமையுடனான காணித்துண்டையும் வளவுகளையும், பொறித்தொகுதியுடனும் எந்திரத்தொகுதியுடனும் சாதனத்துடனும் சேர்த்து விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்து ஒரு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து முப்பத்திரெண்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 21,89,032.48) கொண்ட தொகையை, 2006, யூலை 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை பதினெட்டு இலட்சத்து இருபத்தோராயிரத்து அறுநூற்று எழுபது ரூபா (18,21,670) கொண்ட தொகைமீது

ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீத மளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல்(சஎபிவீ) ஆண்டொன்றுக்குப் ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 335 ஆம் மற்றும் 336 ஆம் இலக்கங்களைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட முறையே பாதையுரிமை யுடனான காணித்துண்டும் வளவுகளும், பொறித்தொகுதியுடனும், எந்திரத் தொகுதியுடனும், சாதனத்துடனும் சேர்த்து, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 335 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையின் உடுகஹாபத்தவில் சீதாவக்க பிரதேச சபையின் எல்லைகளினுள் (ஹன்வெல்ல-உடுகமபத்தவ உப அலுவலகம்) கணன்பெல்லவில் அமைந்துள்ளதும், கணன்பெல்லலந்த என்றழைக்கப்படும் காணியின தாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளரான கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, ஒகத்து 3 ஆந் தேதிய 1329 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலாக, அத்துடன் சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 – வடக்கில் : 596/ஏ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ/4 இனாலும் வறக்காவில் கும்புரவினாலும் ; கிழக்கில்; வறக்காவில கும்புரவினாலும் 596/ஏ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ/1 இனாலும் ; தெற்கில் 596/ஏ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ/1 இனாலும் காணித்துண்டம் 2 இனாலும் ; மேற்கில் : காணித்துண்டங்கள் 2, 3 என்பவற்றினாலும் (15 அடி அகலமான வீதி ஒதுக்கு) மற்றும் 596/ஏ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ/4 இனாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1329 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு றூட்களை (0ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட 1329 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 இன் (15 அடி அகலமான வீதி ஒதுக்கு) மீதான பாதையுரிமையுடன் சேர்த்து.

சொல்லப்பட்ட காணித்துண்டங்கள் 1 மற்றும் 3, கீழே விவரிக்கப்பட்ட காணியின் உபபிரிவுகளாகவுள்ளன :-

மேற்கூறப்பட்ட கணன்பெல்லவில் அமைந்துள்ள கணன்பெல்லலந்த என்றழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சீ. ஏ. ஞானபிரகாசம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1937, ஏப்பிறல் 22 ஆந் தேதிய 596/ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் ஏ/2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ/2 பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது – வடகிழக்கில் : வறக்காவில கும்புர; தென்கிழக்கில் : காணித்துண்டம் ஏ1 ; தென் மேற்கில் : கொஸ்கமபூகொட வீதி மற்றும் வடமேற்கில் : காணித்துண்டம் ஏ4 ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடம், மரங்கள், பயிர்கள் மற்றும் அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட 596/ஏ ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க ஒரு ஏக்கர் இருபத்திமூன்று தசம் மூன்று மூன்று பேர்ச்சுக்களைக் (1ஏ. 0றூ. 23.33பே.) கொண்டுள்ளது.

### 336 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

| விவரணம் | அளவு |
|---|---|
| மினி சொப்பர் பொறி | 1 |
| தராசுகள் | 2 |
| தையல் மெஷீன் | 1 |

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

4-347/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.